

# சிலுவைப் பாதை

## தூய ஆரோக்கிய அன்னைப் பங்கு

# என் அன்றாட சிலுவைப்பாதை

சிலுவைப்பாதையில் நான் ஓர் செப வழிநடத்துதலில் நடந்து செல்கிறேன். என் மனதில் இயேசுவுடன் கல்வாரிப் பயணம் செல்கிறேன். அவரது பாடுகள் சாவு ஆகியவற்றைப்பற்றி தியானம் செய்கிறேன். ஒவ்வொரு தியானமும் இயேசுவுடன் ஒரு தனிப்பட்ட சந்திப்பு. மேலும், என் வாழ்வில் அவரின் பிரசன்னத்தைக் குறித்து புதியதோர் கண்டுபிடிப்பு. ஒவ்வொரு தியானமும் என் வாழ்வில் நான் சந்தித்த குறிப்பிட்ட ஒரு சிலர், சில இடங்கள், சில அனுபவங்கள் முதலியவற்றை நினைவில் கொண்டு வந்து அதில் ஆழ்ந்து சிந்திக்கத் தூண்டுகின்றன.

## சிலுவை அடையாளம்

தந்தை, மகன், தூய ஆவியின் பெயரால் ஆமேன்

## வேத நூல் வாசகம் - தொடக்கம்

(மேலும் இயேசு) “மானிட மகன் பலவாறு துன்பப்படவும் மூப்பர்கள், தலைமைக் குருக்கள், மறைநூல் அறிஞர் ஆகியோரால் உதறித் தள்ளப்பட்டுக் கொலை செய்யப்படவும் மூன்றாம் நாளில் உயிருடன் எழுப்பப்படவும் வேண்டும். என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையை நாள்தோறும் தூக்கிக் கொண்டு என்னைப் பின்பற்றட்டும். ஏனெனில் தம் உயிரைக் காத்துக்கொள்ள விரும்பும் எவரும் அதை இழந்து விடுவார். ஆனால் என் பொருட்டு தம் உயிரை இழக்கும் எவரும் அதைக் காத்துக் கொள்வர். (லூக்கா 9:22-24).

## தொடக்கச் செபம்

இயேசுவே! என் ஆண்டவரே! நான் உம்முடன் இந்தக் கல்வாரிப் பயணத்தைத் தொடங்கும்போது நான் உம்மோடு நெருங்கி, உம் பிரசன்னத்தில் ஆழ்ந்திருக்க எனக்கு உதவியருளும். உமது பாடுகளிலும், சாவிலும் என் சிலுவையை நான் சுமந்துக் கொண்டு உம்மைப் பின்பற்றி வருவதற்கு, தேவையான வலிமையைத் தேடிக்கண்டு பிடிக்க எனக்கு அருள் புரியும்.

**எங்கே சுமந்து போறீர் - சிலுவையை நீர் எங்கே சுமந்து போறீர்பொங்கும் பகைவராலே - அங்கம் நந் நடுங்க எங்கே போறீர்**

# முதலாம் நிலை

திவ்விய இயேசுவே, உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்கிறோம்.
அதேனென்றால் உம்முடைய திருச்சிலுவையைக் கொண்டு உலகத்தை இரட்சித்தீர்.

## பிலாத்து, இயேசுவுக்கு மரணத் தீர்ப்பு அளிக்கிறான்:



### தியானச் சிந்தனை:

ஆண்டவரே! இயேசுவே! நான் அடிக்கடி பிறரைத் தீர்ப்பிடுகிறேன். அவர்களை உணர்ந்து கொள்ளவும் அன்பு செய்யவும் தவறி விடுகிறேன். நான் மக்களை உமது கண்ணோட்டத்தில் பார்க்கவும் ஒரு போன்சியு பிலாத்துவின் கண்கள் மூலமாய் காணாதிருக்கவும் அருள்புரியும்.

பரலோக…/ அருள்நிறை…./ பிதாவுக்கு…..

எங்கள்பேரில் தயவாயிரும் சுவாமி.
எங்கள்பேரில் தயவாயிரும்.
விசுவாசிகளுடைய ஆத்துமங்கள் சருவேசுரனுடைய இரக்கத்தினால் சமாதானத்தில் இளைப்பாறக் கடவன. ஆமென்.

**மனித பாவத்தாலே - மரணத்தீர்வைபெற்று தூய செம்மறி போலே துக்கத்துடன் வருந்தி, எங்கே போறீர்**

# இரண்டாம் நிலை

திவ்விய இயேசுவே, உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்கிறோம்.
அதேனென்றால் உம்முடைய திருச்சிலுவையைக் கொண்டு உலகத்தை இரட்சித்தீர்.

## இயேசு தம் சிலுவையை ஏற்றுக் கொள்கிறார்



**தியானச் சிந்தனை:**

ஆண்டவரே! இயேசுவே! நீர் உலகை மீட்க உம் சிலுவையை அணைத்துக் கொண்டீர். என் வாழ்வில் ஊடுருவும் துன்பங்கள், போராட்டங்கள், ஏமாற்றங்கள், வலிகள் ஆகிய சிலுவைகளை நான் அணைத்துக்கொள்ள எனக்கு அருள்புரியும்.

பரலோக.../ அருள்நிறை..../ பிதாவுக்கு.....

எங்கள்பேரில் தயவாயிரும் சுவாமி.
எங்கள்பேரில் தயவாயிரும்.
விசுவாசிகளுடைய ஆத்துமங்கள் சருவேசுருனுடைய இரக்கத்தினால் சமாதானத்தில் இளைப்பாறக் கடவன. ஆமென்.

**பாரச் சிலுவையை நீர் பாசத்துடன் அணைத்து பாவத்தின் சுமைதாங்கி ஆர்வத்துடன் நடந்து எங்கே போறீர்**

# மூன்றாம் நிலை

திவ்விய இயேசுவே, உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்கிறோம்.
அதேனென்றால் உம்முடைய திருச்சிலுவையைக் கொண்டு உலகத்தை இரட்சித்தீர்.

## இயேசு முதல் முறை கீழே விழுகிறார்:



**தியானச் சிந்தனை:**

ஆண்டவரே! இயேசுவே! நான் உம்மைப் பின் தொடர எத்தனை தடவைகள் கீழே விழுகிறேன். என்னைத் தூக்கி நிறுத்த நீர் எப்போதுமே அங்கே இருக்கிறீர். நான் உமது அன்புக் கரங்களில் எப்போதுமே என் நம்பிக்கையை வைக்க எனக்கு அருள் புரியும்.

பரலோக.../ அருள்நிறை..../ பிதாவுக்கு.....

எங்கள்பேரில் தயவாயிரும் சுவாமி.
எங்கள்பேரில் தயவாயிரும்.
விசுவாசிகளுடைய ஆத்துமங்கள் சருவேசுருனுடைய இரக்கத்தினால் சமாதானத்தில் இளைப்பாறக் கடவன. ஆமென்.

**கல்வாரி மலை நாடி தள்ளாடித் தரை வீழ்ந்து எல்லோரின் பாவங்களை தனிமையாய்ச் சுமந்து எங்கே போறீர்**

## நான்காம் நிலை

திவ்விய இயேசுவே, உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்கிறோம்.
அதேனென்றால் உம்முடைய திருச்சிலுவையைக் கொண்டு உலகத்தை இரட்சித்தீர்.

## இயேசு தம் அன்னையைச் சந்திக்கிறார்:



**தியானச் சிந்தனை:**

ஆண்டவரே! இயேசுவே! உம் அன்னை உம்மேல் கொண்டுள்ள அன்பானது அவரது வேதனையை முந்திக்கொண்டு மேல்நோக்கி உள்ளது. நீர் அநேகம்முறை அடிக்கடி பிறரில் என்னிடம் வருகிறீர். அவர்களின் அன்பு எனக்கு புதுவாழ்வை அளிக்கிறது. நீர், மற்றவர் மூலம் எத்தனை முறை என் வாழ்வில் அன்பு செய்கிறீர் என்று காண அருள் புரியும்.

பரலோக.../ அருள்நிறை..../ பிதாவுக்கு.....

எங்கள்பேரில் தயவாயிரும் சுவாமி.
எங்கள்பேரில் தயவாயிரும்.
விசுவாசிகளுடைய ஆத்துமங்கள் சருவேசுருனுடைய இரக்கத்தினால் சமாதானத்தில் இளைப்பாறக் கடவன. ஆமென்.

**மாமரி கன்னி அன்னை மகனின் கோலங்கண்டு மாதுயருடன் வாடி மனம் நொந்து வருந்த எங்கே போறீர்**

# ஐந்தாம் நிலை

திவ்விய இயேசுவே, உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்கிறோம்.
அதேனென்றால் உம்முடைய திருச்சிலுவையைக் கொண்டு உலகத்தை இரட்சித்தீர்.

## சீமோன் சிலுவையைச் சுமக்க உதவுகிறார்:



## தியானச் சிந்தனை:

ஆண்டவரே! இயேசுவே! பல சமயங்களில் நான் மற்றவர்களின் தேவைகளுக்குப் பாராமுகமாய் இருந்திருக்கிறேன். என்னை அன்பு செய்யும் மக்களையும் உதாசீனப்படுத்தி விடுகிறேன். பிறரை நேசிக்கவும், உண்மையாகவே உறுதியுடன் உம்மை என் வாழ்வில் கண்டுகொள்ளவும் எனக்கு அருள் புரியும்.

பரலோக.../ அருள்நிறை..../ பிதாவுக்கு.....

எங்கள்பேரில் தயவாயிரும் சுவாமி.
எங்கள்பேரில் தயவாயிரும்.
விசுவாசிகளுடைய ஆத்துமங்கள் சருவேசுருனுடைய இரக்கத்தினால் சமாதானத்தில் இளைப்பாறக் கடவன. ஆமென்.

**உதிரமாய்ச் சிந்தி உள்ள வீரமிழந்து சீரோன் சீமோன்**
**துணையை ஏற்று வழி நடந்து எங்கே போறீர்**

# ஆறாம் நிலை

திவ்விய இயேசுவே, உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்கிறோம்.
அதேனென்றால் உம்முடைய திருச்சிலுவையைக் கொண்டு உலகத்தை இரட்சித்தீர்.

## வெரோணிக்காள் இயேசுவின் முகத்தைத் துடைக்கிறாள்:



## தியானச் சிந்தனை:

ஆண்டவரே! இயேசுவே! சில நேரங்களில் நான் பிறருக்கு உதவிட அஞ்சுகிறேன். நான் செயற்படவேண்டிய நேரத்தில் ஒன்றும் செய்வதில்லை. நீர், எனக்கு ஆழ்ந்த தைரியம் கொண்ட விசுவாசத்தை அளித்தருளும். நீர் என்னோடு இருக்கிறீர் என்று நம்பிக்கைக் கொள்ள எனக்கு உதவியருளும்.

பரலோக…/ அருள்நிறை…./ பிதாவுக்கு…..

எங்கள்பேரில் தயவாயிரும் சுவாமி.
எங்கள்பேரில் தயவாயிரும்.
விசுவாசிகளுடைய ஆத்துமங்கள் சருவேசுருனுடைய
இரக்கத்தினால் சமாதானத்தில் இளைப்பாறக் கடவன. ஆமென்.

**கர்த்தனே உம் வதனம் - இரத்தக் கறையால் மங்கி உத்தமி**
**வெரோணிக்கா வெண்துகிலாற் துடைத்தும் எங்கே போறீர்**

## ஏழாம் நிலை

திவ்விய இயேசுவே, உம்மை ஆரரதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்கிறோம்.
அதேனென்றால் உம்முடைய திருச்சிலுவையைக் கொண்டு உலகத்தை இரட்சித்தீர்.

## இயேசு இரண்டாம் முறை கீழே விழுகிறார்:



### தியானச் சிந்தனை:

ஆண்டவரே! இயேசுவே! சில சமயம் தோல்வியும் ஏமாற்றமும் என்னைத் துயரத்தின் உச்சக்கட்டத்திற்கு எடுத்துச் செல்கின்றன. நானோ, உம்மிடமிருந்தும் மற்றோரிடமிருந்தும் விலகி என் சுயமரியாதை, தன்னலம், பரிதாபம் ஆகியவற்றின் மத்தியில் மறைந்து கொள்கிறேன். நீர் எனக்குத் தேவையுள்ள நம்பிக்கையை அளித்து, மறுபடியும் துவங்குதற்கு எப்போதுமே பயப்படாமலிருக்க அருள்புரியும்.

பரலோக.../ அருள்நிறை..../ பிதாவுக்கு.....

எங்கள்பேரில் தயவாயிரும் சுவாமி.
எங்கள்பேரில் தயவாயிரும்.
விசுவாசிகளுடைய ஆத்துமங்கள் சருவேசுருனுடைய
இரக்கத்தினால் சமாதானத்தில் இளைப்பாறக் கடவன. ஆமென்.

**பாவங்கள் ஒன்றாய்ச் சேர்ந்த பாரச் சுமையினாலே மீண்டும் தரையில் வீழ்ந்தும் - வீரத்துடன் எழுந்து எங்கே போறீர்**

# எட்டாம் நிலை

திவ்விய இயேசுவே, உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்கிறோம்.
அதேனென்றால் உம்முடைய திருச்சிலுவையைக் கொண்டு உலகத்தை இரட்சித்தீர்.

## இயேசு பெண்களிடம் பேசுகிறார்:



## தியானச் சிந்தனை:

ஆண்டவரே! இயேசுவே! மற்றோருக்காக நீர் காட்டும் கருணை என் உள்ளத்தை ஆட்கொள்ளுகிறது. நான் உம்மைப் பற்றி நினைக்கும் போது, நீர் அன்பு காட்டும் விதத்தையும், நான் தாழ்ந்த, மற்றும் தன்னலம் நிறைந்த உள்ளம் கொண்டவன் என்பதையும் கருத வைக்கிறது. நீர் தந்த அன்பை நான் முழுமையாக அளிக்கவும், அதனால் நீர், உம் அன்பினால் என்னை நிரப்பவும் உதவியருளும்.

பரலோக.../ அருள்நிறை..../ பிதாவுக்கு.....

எங்கள்பேரில் தயவாயிரும் சுவாமி.
எங்கள்பேரில் தயவாயிரும்.
விசுவாசிகளுடைய ஆத்துமங்கள் சருவேசுருனுடைய
இரக்கத்தினால் சமாதானத்தில் இளைப்பாறக் கடவன. ஆமென்.

**புண்ணிய பெண்மணிகள் - புலம்பி அழும் வேளை தேற்றுதல்**
**கூறி நீரும் - நேசக் கண்ணீர் சொரிந்து எங்கே போறீர்**

## ஒன்பதாம் நிலை

திவ்விய இயேசுவே, உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்கிறோம்.
அதேனென்றால் உம்முடைய திருச்சிலுவையைக் கொண்டு உலகத்தை இரட்சித்தீர்.

## இயேசு மூன்றாம் முறை கீழே விழுகிறார்:



### தியானச் சிந்தனை:

ஆண்டவரே! இயேசுவே! குறைந்து கொண்டு வரும் உம் பலமானது, எவ்வளவு இயலாதவன் நான் என என்னை உணரச் செய்கிறது. நீரின்றி என்னால் எதுவும் செய்ய இயலாது. நீர் எனக்குளத்துணைத் தேவை என்றுணர, நான் உமது பலத்தில் நிற்க எனக்கு அருள் புரிவீராக.

பரலோக.../ அருள்நிறை..../ பிதாவுக்கு.....


எங்கள்பேரில் தயவாயிரும் சுவாமி.
எங்கள்பேரில் தயவாயிரும்.
விசுவாசிகளுடைய ஆத்துமங்கள் சருவேசுருனுடைய இரக்கத்தினால் சமாதானத்தில் இளைப்பாறக் கடவன. ஆமென்.

**தூர வழி சிலுவை தாங்கப் பெலமுமின்றி மூன்றாம் முறை தரையில் - முகம் படிந் தெழுந்தும் எங்கே போறீர்**

## பத்தாம் நிலை

திவ்விய இயேசுவே, உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்கிறோம்.
அதேனென்றால் உம்முடைய திருச்சிலுவையைக் கொண்டு உலகத்தை இரட்சித்தீர்.

## இயேசுவின் உடைகள் உரித்தெடுக்கப்படுகின்றன:



### தியானச் சிந்தனை:

ஆண்டவரே! இயேசுவே! நீர் இவ்வளவு கொடுமையாக அவமதிக்கப்பட்டதைக் கண்டு, நான் எவ்வளவு தூரம், என் செயல்கள், என் உடமைகள், என் வழி ஆகியவற்றை உறுதியாகப் பற்றிக் கொண்டிருக்றேன் என உணருகிறேன். என் வாழ்வில் நான் உமக்கு அருகில் நெருக்கமாய் வளரவும், மற்றோருடன் இணையவும், தடைகளாய் உள்ள இப்பற்றுதலை விட்டுவிட எனக்கு அருள் புரியும்.

பரலோக…/ அருள்நிறை…./ பிதாவுக்கு…..

எங்கள்பேரில் தயவாயிரும் சுவாமி.
எங்கள்பேரில் தயவாயிரும்.
விசுவாசிகளுடைய ஆத்துமங்கள் சருவேசுருனுடைய
இரக்கத்தினால் சமாதானத்தில் இளைப்பாறக் கடவன. ஆமென்.

**நீட்டாடை கழற்றவே கோடிக் காயங்களாலே இரத்த
மாறாய்ப்பெருக வேதனையால் வருந்தி தூயா நின்றீர்**

## பதினொராம் நிலை

திவ்விய இயேசுவே, உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்கிறோம்.
அதேனென்றால் உம்முடைய திருச்சிலுவையைக் கொண்டு உலகத்தை இரட்சித்தீர்.

## இயேசு சிலுவையில் அறையப்படுகிறார்:



### தியானச் சிந்தனை:

ஆண்டவரே! இயேசுவே! நீர் சிலுவையில் அறையப்பட்டுள்ளதை நான் பார்க்கும் போது, என்மேல் நீர் கொண்டுள்ள மிகப் பெரிய அன்பைக் குறித்து நான் எப்போதுமே மகிழ்வுற்றேன். என்மீது நீர் வைத்துள்ள உமது அன்பின் மிகப் பெரிய அடையாளமாக, சிலுவையை நான் காண்பதற்கு அருள்புரியும்.

பரலோக…/ அருள்நிறை…./ பிதாவுக்கு…..


எங்கள்பேரில் தயவாயிரும் சுவாமி.
எங்கள்பேரில் தயவாயிரும்.
விசுவாசிகளுடைய ஆத்துமங்கள் சருவேசுருனுடைய இரக்கத்தினால் சமாதானத்தில் இளைப்பாறக் கடவன. ஆமென்.

**நீட்டிய கைகால்களில் - நீண்ட இருப்பாணிகள் நிஷ்஠ூரமாய்**
**அறைய நேசத்தினாலே வெந்து பலியானீர்**

# பன்னிரண்டாம் நிலை

திவ்விய இயேசுவே, உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்கிறோம்.
அதேனென்றால் உம்முடைய திருச்சிலுவையைக் கொண்டு உலகத்தை இரட்சித்தீர்.

## .இயேசு சிலுவையில் உயிர் விடுகிறார்:



**தியானச் சிந்தனை:**

ஆண்டவரே! இயேசுவே! உமது நொடிந்து, உடைந்த உயிரற்ற உடல், என்னை மிக ஆழ்ந்த விசுவாசத்திற்கு அழைப்பு விடுகிறது. நீர் மரணத்தையே தேர்ந்து கொண்டீர். நான் சிலுவைகளில் உம்மை அன்பு செய்ய எனக்கு அருள் புரியும்.

பரலோக…/ அருள்நிறை…./ பிதாவுக்கு…..


எங்கள்பேரில் தயவாயிரும் சுவாமி.
எங்கள்பேரில் தயவாயிரும்.
விசுவாசிகளுடைய ஆத்துமங்கள் சருவேசுருனுடைய
இரக்கத்தினால் சமாதானத்தில் இளைப்பாறக் கடவன. ஆமென்.

**சிலுவைப் பீடமேறி மும்மணிநேரம் தொங்கி நேய பிதாவை வேண்டி ஆருயிர் ஒப்படைத்துப் பலியானீர்**

# பதின்மூன்றாம் நிலை

திவ்விய இயேசுவே, உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்கிறோம்.
அதேனென்றால் உம்முடைய திருச்சிலுவையைக் கொண்டு உலகத்தை இரட்சித்தீர்.

## இயேசுவை சிலுவையிலிருந்து எடுத்து கீழே இறக்குகிறார்கள்:



**தியானச் சிந்தனை:**

ஆண்டவரே! இயேசுவே! உம் உடல் சிலுவையினின்று எடுக்கப்படுவதைப் பார்க்கும்போது, நான் என் உயிரை விடுவதற்கு எவ்வளவு அச்சம் கொள்கிறேன் என்பதை நினைவு கூறுகிறேன். நான் சிறப்பின்றி, உபயோகமின்றி இருப்பதை நினைக்கும் போது அச்சம் என்னை ஆட்கொள்கிறது. என் வாழ்வை உம் கையில் ஒப்புக் கொடுக்க எனக்கு அருள் புரியும்.

பரலோக.../ அருள்நிறை..../ பிதாவுக்கு.....


எங்கள்பேரில் தயவாயிரும் சுவாமி.
எங்கள்பேரில் தயவாயிரும்.
விசுவாசிகளுடைய ஆத்துமங்கள் சருவேசுருனுடைய
இரக்கத்தினால் சமாதானத்தில் இளைப்பாறக் கடவன. ஆமென்.

**உமது மடிமீதில் - மரித்த மகன் தாங்கி ஏழுசோக வாட்களால் - ஊடுருவி வருந்தி தாயே நின்றீர்**

## பதினான்காம் நிலை

திவ்விய இயேசுவே, உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்கிறோம்.
அதேனென்றால் உம்முடைய திருச்சிலுவையைக் கொண்டு உலகத்தை இரட்சித்தீர்.

## இயேசுவை கல்லறையில் வைக்கின்றனர்:



**தியானச் சிந்தனை:**

ஆண்டவரே! இயேசுவே! மிகப் பெரிய இந்தக் கல்லால் உம் கல்லறையை மூடி முத்திரையைப் பதிப்பதைக் காணும்போது, நான் தன்னந்தனியாக, யாருமில்லாமல் விடப்பட்டதாக உணருகிறேன். நீர் சில சமயங்களில் என்னை விட்டகன்று தூரம் சென்று விட்டதாகவோ அல்லது என் வாழ்வில் உமது பிரசன்னம் இல்லை என்றோ தோன்றுகிற போதும், நீர் என்னில் நெருக்கமாக உள்ளீர் என்றும், உம் பிரசன்னம் என்னில் உள்ளது என்றும் நம்ப அருள் புரியும்.

பரலோக…/ அருள்நிறை…./ பிதாவுக்கு…..

எங்கள்பேரில் தயவாயிரும் சுவாமி.
எங்கள்பேரில் தயவாயிரும்.
விசுவாசிகளுடைய ஆத்துமங்கள் சருவேசுருனுடைய
இரக்கத்தினால் சமாதானத்தில் இளைப்பாறக் கடவன. ஆமென்.

**கர்த்தனே நின் உடலை கல்லறைக்குள்ளடக்க உத்தானம்
ஜீவனுமாய் உயிருடன் எழுந்து காட்சி தந்தீர்**

## வேத நூல் வாசகம் முடிவு

வாரத்தின் முதல்நாள் விடியற் காலையிலேயே தாங்கள் ஆயத்தம் செய்திருந்த நறுமணப் பொருள்களை எடுத்துக்கொண்டுவந்த அப்பெண்கள் கல்லறை வாயிலிருந்து கல் புரட்டப்பட்டிருப்பதைக் கண்டார்கள். அவர்கள் உள்ளே நுழைந்தபோது அங்கே ஆண்டவர் இயேசுவின் உடலைக் காணாததால் அதைக் குறித்து அவர்கள் குழப்பமுற்றார்கள். அப்போது திடீரென மின்னலைப் போன்று ஒளி வீசும் ஆடை அணிந்த இருவர் அவர்களுக்குத் தோன்றினர். இதனால், அப்பெண்கள் அச்சமுற்றுத் தலைகுனிந்து நின்று கொண்டிருந்தனர். அவ்விரு மனிதர்களும் அப்பெண்களை நோக்கி, ‘‘உயிரோடு இருப்பவரைக் கல்லறையில் தேடுவானேன்? அவர் இங்கே இல்லை. அவர் உயிருடன் எழுப்பப்பட்டார். கலிலேயாவில் இருக்கும்போது அவர் உங்களுக்குச் சொன்னதை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள். “மானிடமகன் பாவிகள் கையில் ஒப்புவிக்கப்பட்டுச் சிலுவையில் அறையப்பட வேண்டும். மூன்றாம் நாளில் உயிர்த்தெழ வேண்டும், என்று சொன்னாரே?” என்றார்கள். அப்போது அவர்கள் அவருடைய வார்த்தைகளை நினைவு கூர்ந்தனர்.

## முடிவு செபம்

ஆண்டவரே! இயேசுவே! என் வாழ்வின் ஒவ்வொரு நாளும் நான் உம்முடன் நடந்து வர எனக்கு உதவி புரியும். என் வாழ்வின் இன்பத்துன்பங்கள், வலிகள், நிவாரணங்கள், தோல்விகள், வெற்றிகள் யாவும் உண்மையிலே என்னை நெருக்கமாக உம்மிடம் அழைத்துச் செல்லவும், சிறு மரணங்களும் உயிர்ப்புகளும் நான் எப்போதும் உம்மோடு வழி நடக்கத் தேவையான விசுவாசத்தையும், நம்பிக்கையும் எனக்குத் தந்தருளவும் செயும் சுவாமி. ஆமென்.



# தூய ஆரோக்கிய அன்னைப் பங்கு



172 Leslie Street, Toronto On .M4M 3C7 Tel: 416 466 7815

www.tamilparish.com